**செய்தி வெளியீடு எண் : 1495** **நாள் : 29.08.2022**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் இன்று (29.8.2022) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டிலுள்ள பாதுகாக்கப்பட்ட வன உயிரின வாழ்விடங்களை சுற்றி அறிவிக்கப்பட்ட சூழல் தாங்கு மண்டலங்கள் (Eco Sensitive Zone) குறித்து மாண்பமை உச்சநீதிமன்றம் 3.6.2022 அன்று அளித்துள்ள தீர்ப்பு மற்றும் தமிழ்நாடு அரசு எடுத்து வரும் நடவடிக்கை குறித்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

மாண்பமை உச்சநீதிமன்றம், பாதுகாக்கப்பட்ட வனஉயிரின வாழ்விடங்களை சுற்றி அமைக்கப்படும் சூழல் தாங்கு மண்டலங்கள் (Eco Sensitive Zone) தொடர்பாக முக்கிய தீர்ப்பினை வழங்கியுள்ளது. அதில் குறிப்பிட்டுள்ள சில பகுதிகளான:

- ஒவ்வொரு பாதுகாக்கப்பட்ட வனஉயிரின வாழ்விடங்களை சுற்றி குறைந்தபட்சம் 1 கி.மீ துரத்திற்கு சூழல் தாங்கு மண்டலம் அறிவிக்கப்படவேண்டும்.

- ஒவ்வொரு வன உயிரின பகுதிகளை சுற்றி 1 கி.மீ தொலைவில் அல்லது கூடுதலாக அறிவிக்கப்பட்டுள்ள இடை தாங்குமண்டல பகுதிகளில் 9.02.2011 நாளிட்ட வழிகாட்டுதல்களின்படி தடை செய்யப்பட்ட பணிகள் தவிர வேறெந்த பணிகளும் உரிய அனுமதி பெற்று தொடர்ந்து செய்யப்படலாம்.

- இந்த சூழல் தாங்கு மண்டலங்களில், எந்தவொரு நோக்கத்திற்காகவும் புதிய கட்டுமானங்கள் அனுமதிக்கப்படக் கூடாது.

போன்றவை மக்களின் வாழ்வாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்துவையாக உள்ளன.

இக்கூட்டத்தில், இந்த உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு தொடர்பாக ஒன்றிய அரசு வழக்கிடை மனு (Interlocutory Application) ஒன்றை தாக்கல் செய்வதாக தெரிவித்துள்ளது. தமிழ்நாடு அரசும் மாநிலத்திலுள்ள இதே செயல்பாடுகளால் ஏற்படும் தாக்கங்களை கருத்திற்கொண்டு வழக்கிடை மனு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்து வருகிறது.

தமிழ்நாட்டிலுள்ள 25 சரணாலயங்கள் மற்றும் புலிகள் காப்பகங்களில் சூழல் தாங்கு மண்டல பகுதி இதுவரை அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. மேலும், 7 சரணாலயங்கள் மற்றும் தேசிய பூங்காக்களின் சூழல் தாங்கு மண்டலத்திற்காக முன் மொழிவுகள் தமிழ்நாடு அரசால் அனுப்பப்பட்டுள்ளது.

**இப்பகுதிகளின் சூழல் தாங்கு மண்டலங்கள் அந்தந்த உள்ளூர் சூழ்நிலைகளுக்கு ஏற்பவும் வன உயிரினப் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு காரணிகளின் அடிப்படையிலும் அறிவிக்கப்பட்டு / முன்மொழியப்பட்டுள்ளன.** இந்தப் பணிகள் அனைத்தும் ஒன்றிய அரசு வெளியிட்டுள்ள 9.02.2011 நாளிட்ட வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி அறிவிக்கப்பட்டுள்ளன.

ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை அமைச்சகம் வெளியிட்டுள்ள இந்த வழிகாட்டுதல்களில் மூன்று வகையாக இப்பகுதிகளின் செயல்பாடுகளை ஒழுங்குபடுத்துகிறது.

1. முற்றிலும் தடை செய்யப்பட்ட பணிகள் மற்றும் செயல்பாடுகள் (Prohibited Activities)
2. ஒழுங்குபடுத்தப்படும் செயல்பாடுகள் (Regulated Activities)
3. அனுமதிக்கப்படும் செயல்பாடுகள் (Permitted Activities)

மாண்பமை உச்சநீதிமன்றம் தற்போது அளித்துள்ள தீர்ப்பால் மக்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளை கருத்தில் கொண்டு, மாண்பமை உச்சநீதிமன்றம் அளித்துள்ள ஆணையை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கோரி தமிழ்நாடு அரசு வழக்கிடை மனுவை உடனடியாக தாக்கல் செய்யவுள்ளது.

இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.கா.இராமச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஆ. இராசா, தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.நா.முருகானந்தம், இ.ஆ.ப., சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.சுப்ரியா சாஹு, இ.ஆ.ப., முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் திரு.சையத் முசாமில் அப்பாஸ், இ.வ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

***********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in